# රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය

**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

**නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.**
**சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,இலங்கை.**
**Independence Square, Colombo 07, Sri Lanka.**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | IAD/ADM/GA21/120KVA/GEN | ඔබේ අංකය<br>உமதுஇல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2023.10.05 |

பின்கோ டெக்னொலொஜிஸ் (பிரைவேட்) லிமிடெட்
டிரேட் ப்ரோமோட்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட
சி என்ட் எம் பவர் டெக்னாலஜ
மெட்ரோபாலிட்டன் டெக்னாலஜிஸ் (பிரைவேட்) லிமிடெட்
எஸ்னா ஐலன்ட் என்டர்பிரைஸஸ் (பிரைவேட்) லிமிடெட்

## <u>120KVA ஜெனரேட்டர் இயந்திர சேவை மற்றும் பராமரிப்புக்கான விலைமனுக்கோரல்</u>

இந்த அமைச்சக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள 120KVA ஜெனரேட்டர் இயந்திர சேவை மற்றும் பராமரிப்புக்கான விலைகள் கோரப்படுகின்றன.

2. விலை மனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன், சம்பந்தப்பட்ட பணியின் நிலைய ஆய்வொன்றை மேற்கொண்டு புரிதலை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு அந்த பணிக்காக உங்களுக்கு செலவாகும் எந்தத் தொகையையும் அமைச்சினால் செலுத்தப்பட மாட்டாது.

3. குறித்த ஒப்பந்தம் உங்களுக்கு ஒதுக்கப்பட்டால், பணி ஒதுக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள், ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒருமுறை, உங்களால் வழங்கப்படும் விலைகளுக்கு உட்பட்டு உரிய சேவை வழங்கல் இடம்பெற வேண்டும்.

4. இந்தக் கடிதத்துடன் அனுப்பப்பட்டுள்ள இணைப்பு 01 இல் உள்ள ஆவணத்தின் மூலம் விலைமனுச் சமர்ப்பிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு மேற்படி விலைமனுக்கோரல் ஆவணத்தால் கோரப்பட்டுள்ள ஏனைய தகவல்களும் உங்கள் விலைமனுக்கோரலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. உங்கள் விலைகள் 19.10.2023 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அன்றைய தினம் காலை 10.00 மணிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விலை மனுக்கோரலும் ஏற்கப்படாது.

6. உங்களது விலை மனுக்கோரல் விலைகளை முத்திரையிடப்பட்ட உறைகளில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் **ஜெனரேட்டர் இயந்திர சேவை மற்றும்**


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2696211-13<br>011-2166000 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2695279 | ඊ-මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | information@pubad.gov.lk | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்<br>Website | www.pubad.gov.lk |

**பராமரிப்பு – 2023** எனக் குறிப்பிட்டு 19.10.2023 ஆந்திகதி மு.ப 10.00 க்கு முன்னர் கிடைக்குமாறு சிரேஷ்ட உதவிச் செயலாளர் (உள்ளக நிர்வாகம்) பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது இந்தப்பிரிவில் உள்ள விலைமனுக்கோரல் பெட்டியினுள் இடல் வேண்டும்

7. விலைமனுக்கோரல் திறப்பு 19.10.2023 ஆந்திகதி மு.ப 10.00 மணிக்கு அமைச்சின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள உள்ளக நிர்வாகப் பிரிவில் மேற்கொள்ளப்படுவதோடு, அதன்போது நீங்கள் அல்லது உங்கள் பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம். பங்கேற்பாளர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த நிறுவனத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட்ட கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைக் கொண்டு வர வேண்டும்.

8. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கோரலிலுள்ள விலைகளை ஏற்றுக்கொள்ளுதல், நிராகரித்தல், தொடர்பான பணிகள் குறித்த இறுதி முடிவை அமைச்சிடமே உள்ளது.

ஒப்பம்./ சி.பி.யு ஹெட்டியாராச்சி
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (உள்ளக நிர்வாகம்)
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பதிலாக

தொலைபேசி : +94 11 2692633 (நீட்டிப்பு - 205)

தொலைநகல் : +94 11 2697299

மின்னஞ்சல் : sas-ia@pubad.gov.lk

<u>பிரதி</u>
01. உதவிப்பணிப்பாளர், (தகவல்தொழிநுட்பம்) - தய.மேற்படி விலைகோரலை இணையத்தளப்பக்கத்தில் வெளியிடுவதற்கு